UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருக்குறளில் பரத்தமை எதிர்ப்புச் சிந்தனை

**முனைவர் ஆ. சாஜிதா பேகம்**
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்
காங்கேயம் வணிகவியல் கல்லூரி, நத்தக்கடையூர்
காங்கேயம், திருப்பூர் மாவட்டம்
**முனைவர் ஆ. பரிமளா**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி அரசூர், கோயம்புத்தூர்-07

**ஆய்வு நோக்கம்**

அறத்துப்பாலில் திருவள்ளுவர் தனி மனிதனுக்குரிய ஒழுக்கநெறிகளையும் அவற்றின் இயல்புகளையும் மிக நுட்பமாக எடுத்துரைக்கிறார். ஒழுக்கம் என்பது ஆணிற்;கும் பெண்ணிற்கும் உள்ள பொதுவான அறப்பண்பாகும். ஒழுக்கத்தை உடமையாக மட்டுமின்றி உயிரினும் மேலானதாக வள்ளுவர் காட்டியிருப்பது உலகில் மானுடம் நிலைத்து நிற்பதற்கான வழிமுறையாகும். வள்ளுவர் இங்ஙனம் உரைப்பதற்கான சூழலைப் பொருட்பாலிலுள்ள வரைவின் மகளிர் எனும் அதிகாரத்தின் வழியாக மானுடவியல் மற்றும் உளவியல் பார்வையில் ஆய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்**

வரைவின் மகளிர், பொருட்பெண்டிர், வரைவிலாமாணிழையார், அறமும் ஒழுக்கமும்

**முன்னுரை**

பன்னெடுங்காலத் தமிழ்ச்சமூக வரலாற்றில் மானுடம் தழைக்கும் வாழ்வியல் ஒழுகலாற்று நெறிமுறைகளை வகுத்தளித்தவர், திருவள்ளுவர். 1330 குறட்பாக்கள் கூறும் மெய்ப்பொருள்கள் காலங்கடந்து நின்று தனிமனித வாழ்வியலைச் செம்மையுறச் செய்கின்றது. மனித குலத்திற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களைப் பயக்கின்ற சீரிய கருத்துகளை, கேட்போர் உளங்கனியுமாறு ஈரடிகளில் எடுத்துரைக்கின்றார். அறத்தின் வழிப்பட்ட வாழ்வியலில் ஆணும் பெண்ணும் இணைந்து தமக்கான கடமைகளைப் பொறுப்புணர்வுடன் ஆற்றுகையில் இல்லறம் நல்லறமாக, தமக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியாக மாறுகின்றது. அவ்வகையில் திருக்குறளில் பரத்தமை எதிர்ப்புச் சிந்தனை குறித்த கருத்தாக்கங்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**அறமும் ஒழுக்கமும்**

பண்டைத் தமிழ் மக்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்கநெறியாக அறத்தைக் கட்டமைத்துள்ளனர். இவ்வுலக வாழ்க்கையில் தனிமனிதன் சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து வாழ்வதற்கும் முன்னேற்றத்தை அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்னும் நம்பிக்கையை பழந்தமிழர்கள் முன்வைத்துள்ளனர்.

பொதுவாக மனித இனம் காலங்காலமாகப் பல சமூக மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. பலதிறப்பட்ட விருப்பங்களும், தேவைகளும் பல்கிப் பெருகிய சமூகத்தில் நெறிபிறழாமல்

இருப்பதற்கு அறப் பண்பைச் சான்றோர் பெருமக்கள் வரையறுத்துள்ளனர். அறம் என்னும் சொல்லுக்கான விளக்கம் குறித்து க.த.திருநாவுக்கரசு அவர்கள்,

“நம்முடைய முன்னோர்கள் ‘அறம்’ என்னும் சொல்லிற்குத் தந்துள்ள விளக்கத்தோடு ‘எதிக்ஸ்’ என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருந்துவதாக இருக்கிறது. நல்ல அல்லது தீய செயல்களின் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தை பற்றிய ஆய்வியல் கலையே ‘எத்திக்ஸ்’ என்பதாகும். இதைத் தமிழில் ‘அறவியல்’ எனலாம். ‘அறவியல் என்பது ‘சமுதாயத்தில் வாழும் மக்களின் நடத்தையைப் பற்றி ஆராயும் கலை’ என்று நாம் வரையறுத்து கூறலாம்.”[1] என்று விளக்கமளித்துள்ளார். நீதி, கடமை, ஈகை போன்றனவற்றை முன்னோர் வகுத்துள்ளனர். மனிதன் நல்லவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதே அறமெனப் போற்றியு ள்ளனர். இத்தகைய இயற்கை நீதியை சங்கப் பனுவல்கள்,

**அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்**

**வழக்கென வழங்கலும் பழித்தன்று என்ப**
(தொல்.பொருள்:219)

**அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்**
(புறம்.55)

**அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'**
(ஐங்குறு.7)

என்று இயம்புவதனைக் காணமுடிகின்றது. வாழும் வள்ளுவமும்,

**“அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை”**
(குறள். 32)

என்று பகர்கின்றது. அறச் சிந்தனையின் உள்ளார்ந்த பண்பாக அமைவது ‘ஒழுக்கமென’ உலகம் போற்றி வருகின்றது. திருக்குறளின் முதற்பகுதியாகிய அறத்துப் பாலில், திருவள்ளுவர் தனிமனிதர்கள் பலர் ஒன்றாகக் கூடிச் சமுதாயமாக வாழ்வதற்கு, அவர்களிடம் இயல்பாக அமைய வேண்டிய நற்பண்புகளை எடுத்துரைத்து, அவற்றை எவ்வாறு போற்றி வளர்க்கவேண்டும் என்பதையும்; தெளிவுபடுத்தியுள்ளார்.

### வள்ளுவர் கடிந்தொதுக்கும் தீச்செயல்கள்

நல்ல சமுதாயத்தில் இருக்கக் கூடாத தீமைகளாக வரைவின் மகளிரையும் கள்ளுண்ணுதலையும், சூதாடுவதையும் கடிந்து ஒதுக்குகின்றார். நாட்டினை நலிவுறச் செய்யும் கொடிய கேடாக பிறன்மனை நோக்குதலைக் குறிப்பிடுகின்றார். இது நாட்டின் செழிப்பிற்கும் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் ஒழுக்கம் இன்றியமையாதது என்பது தெளிவாகின்றது.

### வள்ளுவர் எதிர்க்கும் வரைவின் மகளிர்

சங்க நூல்களில் குலமகளிர் அல்லாத பெண்கள் “பரத்தை” (அகநானூறு:256) எனப் பரவலாகக் குறிக்கப்படுகிறார்கள். உளக் கட்டுப்பாடின்றிப் பரந்துபட்டுப் பல ஆண்களோடு கூடித்திரியும் பெண்டிரைப் பரத்தையர் என்று கூறியுள்ளனர். இப்பெண் கள் சமூகத்தில் இழித்துரைக்கக் கூடிய நிலையிலேயே வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் பரத்தையிடம் சென்று வந்த கணவனை மனைவி புறக்கணித்து ஏசிப் பேசும் பாடல்கள் கலித்தொகையில் காணக் கிடைக்கின்றன. அத்தகைய தீயொழுக்கம் பேணியஆணைப் “பரத்த” (அகநானூறு:145) என்று தலைவி இகழ்வதாகப் பாடப் பட்டுள்ளது. வள்ளுவரும்,

**பெண்ணியலார் எல்லாரும் கண்ணின்**
**பொதுஉண்பர்**

**நண்ணேன் பரத்தநின் மார்பு** குறள்-1311

பொதுவாகச் சமூகத்தின் சொல்லாடல்களில் ஆண் தவறிழைப்பவனாக இருப்பினும் அதற்கும் பெண்ணை மட்டுமே காரணியாக்கி அவளுக்கு மட்டுமே இழிவையும் அடையாளத்தையும் தரும் பெயர்கள் சுட்டப்படுகின்றன. அப்பெயர்களுக்கு எதிர்மறையான ஆண் பெயர்கள் எங்கும் சுட்டப்படவில்லை. சங்கப் பாக்களில் கணவனை இழந்த மகளிர்,

**‘கழிகல மகளிர்’** (புறம். 280:14)

**‘உயவற் பெண்டிரேம்’** (புறம். 246:10)

**‘தொடிகழி மகளிர்’** (புறம். 238:6)

போன்ற பெண்பாற் சொற்களுக்கு இணையான ஆண்பால் சொற்கள் எங்கும் பயிலப்படவில்லை. மருதநிலப் பாடல்களில் ‘பரத்தை’ என்று பெரும்பாலும் கூறப் படுகின்ற சொல்லுக்கு மேற்சுட்டிய அகநானூற்றுப் பாடல் சான்று தவிர வேறு எங்கும் ‘பரத்தன்’ என்று பரத்தமை பண்பு கொண்ட ஆண் சுட்டப்படவில்லை. ஆனால் வள்ளுவர் இத்தகைய கடியப்பட்ட தொழிலில்

ஈடுபட்ட பெண்டிரை இழிந்த சொற்களால் கூறாது, 'வரைவின் மகளிர்' என்கிறார். திருமணம் எனும் வாழ்க்கை அமைப்பு இல்லாத மகளிர் என நயத்தக்க நாகரிகத் தோடு கூறுவதனை ஈண்டு நோக்கவேண்டும்.

இல்லற நெறியைப் போற்றும் ஆண்களும் பெண்டிரும் வாழும் சமூகத்தில் இத்தகைய இழிதொழில் பேணும் ஒழுக்கமற்ற பெண்டிரும், பரத்தமை பேணும் ஆண்களும் இன்றளவும் சமூகச் சீர்கேட்டிற்குக் காரணமாகி வருகின்றனர். இருப்பினும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த பேரொழுக்கம் கட்டமைக்கப்பட வேண்டிய அவசியத்தை நிலவுடைமைச் சமூகம் ஏற்படுத்தி உள்ளது. எனவே, பொதுப்பாலுறவு முறை கட்டுப்படுத்தப்படுகிறது. இதனை,

"சமுதாயம் தடை செய்துள்ள உறவுகளுக் கிடையே பாலுறவோ, மண உறவோ நிகழ்ந்தால் அது தகாப்புணர்ச்சி எனப்படும்."[2]

என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார். இவ்வாறு தாய்-மகன், தந்தை-மகள், சகோதரன்-சகோதரி போன்ற உறவுகளுக் கிடையே தொல்பழங்குடியில் காணப்பட்டு வந்த கட்டுப்பாடற்ற பாலுறவு முறையைச் சமூகம், குடும்பம், திருமணம் எனும் அமைப்புகளின் உருவாக்கத்தின் மூலம் கட்டுப்படுத்தி உள்ளனர். இதனை,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**

(தொல்.கற்பு.4)

என்று தொல்காப்பியர் 'கரணம்' எனும் திருமணத் தோற்றத்திற்கான காரணத்தை உரைப்பதனால் அறியலாம். இவ்வாறு ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறியின்பாற் கட்டமைக்கப்பட்டுக்கணவன்-மனைவியிடமும், மனைவி-கணவனிடமும் மட்டுமே பாலியல் உரிமை கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டாலும், வளமும் செல்வச் செழிப்பும் பொருள் தேவையும் கட்டுப்பாடு களை உடைக்கின்ற காரணிகளாக உள்ளன.

"குடும்ப உறுப்பினர்களிடம் தோன்றும் பாலுணர்வு எண்ணங்களைக் குடும்பத்தை விட்டு வெளியே உள்ளோரிடம் தீர்த்துக் கொள்ளும் வகையில் ஒரு பாலுறவு ஒழுங்கு முறையை ஏற்படுத்தி அதன் மூலம் சமுதாயத்தின் அடிப்படை அலகாகச் செயல்படும் குடும்பம் என்னும் நிறுவனம் கட்டுக்கோப்பாகச் செயல்பட ஏற்பட்ட ஓர் உலகம் தழுவிய முறையே தகாப்புணர்ச்சி விலக்கு."[3]

மாலினோஸ்கி என்ற உளவியலாளர் கூற்றைப் பக்தவத்சல பாரதி எடுத்துக் கூறியுள்ளார். எனவேதான் பொருளுக்காக விழையும் பெண்களையும் அவர்தம் நலன் துய்க்கும் ஆண்களையும் வள்ளுவர் கடிகின் றார். அதுமட்டுமல்லாது, தனி உடைமைச் சமூகத்திலிருந்து மாற்றமடைந்த காலங் களில் இத்தகைய இழிதொழில் பரவலாக்கப் பட்டிருக்கவேண்டும். உலகின் பெரும் பாலான நாடுகளில் இத்தொழில் வழமை யாகி இருந்துள்ளது. இதனைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறுகையில்,

"பெண்மையை விலைபோக்கி வாழ்வு செய்யும் மாந்தர் கீழ்மை உலக நாடுகள் அனைத்திலும் இவ்வுலக மாந்தவியக்கம் தொடங்கிய நாள் முதல் அனைத்து அறிவியல் கூற்றுகளும் அளவிறந்து முன்னேறியுள்ள இந்நாள்வரை உண்டு என்பதை அனைவரும் அறிவர்"[4]

என்று கருத்துரைக்கின்றார். இருப்பினும் சான்றோர் பெருமக்கள் இத்தகைய நெறிபிறழ்விலிருந்து சமூகத்தைக் காத்துள் ளனர். பெண்வழித் தலைமையிலிருந்து ஆண்வழித் தலைமைக்குச் சமூகம் மாற்றமடைந்த காலக்கட்டங்களிலிருந்து ஆணுக்கான ஆளுமைப் பண்புகளும், நெறிப்படுத்தலும், சமூகத்தின் மூத்தோர் களால்; கற்பிக்கப்பட்டுள்ளன. சமூக மாற்றத்தினை உணர்ந்துகொண்ட பெண்ணும் ஆணை நெறிப்படுத்தினாள் என்ற சிந்தனையை ஔவையின் பாடல் எடுத்துரைக்கின்றது.

**நாடா கொன்றோ காடாகொன்றோ**

**அவலாகொன்றோ மிசையாகொன்றோ**

**எவ்வழி நல்லவர் ஆடவர்;**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே** (புறம்.187)

என்று கூறியுள்ளதன் வாயிலாக அறிய முடிகின்றது. கலித்தொகையில், தலைவி தலைவனைப் பரத்தையிடம் செல்லவிடாமல் காத்து நிற்பதை,

**"கொழுநரைப் போகாமற் காத்து முழுநாளும்**

**வாயில் அடைப்ப வரும்"** (கலி.109:23-25)

என்ற அடிகளில் அவளது அச்சத்தைக் காண

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

முடிகின்றது. ஆண்களுக்கு அறிவுரை கூறும் முறையில் வரைவின்மகளிர் என்ற அதிகாரத் தில், பொருளுக்காக அன்பினை வெளிப்படு த்தும் பெண்டிரால் விளையும் கேட்டினை,

**அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்**

**இன்சொல் இழுக்குத் தரும்** (குறள்.911)

என்றுரைக்கக் காணலாம்.

மேலும் ஆண் தனது மனையாளைத் தவிர மாற்றானைத் தழுவுவதை வன்மையாகக் கண்டிக்கின்றார்.

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்**

**ஏதில் பிணந்தழீஇ அற்று** (குறள்.913)

என்று இழிதொழில் செய்யும் பெண்களைப் பிணம் என்று வன்மையாகக் கூறியிருக்கின் றார் வள்ளுவர். ஏனெனில், அன்றைய சமூகம்,

"ஒரு ஆண்மகன் பல பெண்களை மணந்து கொள்ளலாம், மணந்துகொண்ட மனைவி யரைத் தவிர வேறு பல பெண்களையும் வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளலாம் இவர்களைத் தவிர கணிகையர், வரைவின் மகளிர், விலைமாதர், பொதுமகளிர் என்ற பெயர்களைக் கொண்ட அவர்களுடன் கூடியும் வாழலாம்"[5]

என்று சாமி.சிதம்பரனார் கடிந்துரைக்கின்றார். எனவே ஆண் வழிச்சமூகத்தில் ஆண் ஒழுக்கநெறி பிறழ்வது சமூகக் குற்றமாக வள்ளுவர் கருதி இருக்கவேண்டும். ஆண் உயர்வானவன் என்ற சிந்தையை அவனுக்குள் புகுத்தும் பொருட்டு,

**வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்**

**பூரியர்கள் ஆழும் அளறு** (குறள்.919)

என்று பொது மகளிரின் மெல்லிய தோள், உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடைக்கின்ற நரகமாகும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார்.

ஆளுமைப் பண்பில் ஆண் அறிவுடையவன் என்று சிறப்பித்தும், அவன் பரத்தமைப் பெண்களை நாடும்போது தனது அறிவை இழந்து விடுகிறான் என்ற கருத்தைக் குறட்பா 915இல் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறாகச் சமூகம் ஆண், பெண் என்ற வேறுபாடுகளைக் கடந்து மக்கள் என்ற உயர்நிலைப் பண்பைப் பெறும்பொழுது, தனிமனித கற்புஒழுக்கத்தை அறமாகக் கடைப்பிடிக்க வேண்டியது கால மாற்றத்தின் இன்றியமையாத் தேவை. இதையே திருக் குறள் உலகமாந்தர்களுக்கு எடுத்துரைக்கி ன்றது.

## தொகுப்புரை

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமூக நீதியைக் கற்பித்த வள்ளுவரின் கருத்தாடல்கள் எஞ்ஞான்றும் நிலைபேறுடையவையாகும். நில அடிப்படையிலான சமூகத்தின் நாகரிகப் பண்பாட்டு மாற்றங்கள் ஒழுக்கநெறிக்கான களத்தை உருவாக்குகின்றன. சமூகப் பொருளாதார வளர்ச்சியானது தனி மனித மனத்தில் பல நல்வினைகளையும் தீவினைக ளையும் ஆற்றியுள்ளது. காலந்தோறும் நல் வினைகளை ஊக்குவித்தும் தீவினைகளை அறவே கடிந்தும் பழந்தமிழ்;ச் சான்றோர் பெருமக்கள் நெறிப்படுத்தி வருவதை இலக்கிய இலக்கணங்கள் எடுத்துரைக்கின் றன. அதன்வழிச் சமூகத்தின் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒழுக்கம் என்பது உயிரைக் காட்டிலும் மேலானது என்ற மான உணர்ச்சியை ஊட்டுகிறார். இல்லறத்தை நல்லறமாக்கும் பெண்மையைப் போற்றும் வண்ணம் தீய நடத்தைகளைப் புறக்கணிக் கும் வள்ளுவரின் நீதி போற்றப்பட வேண்டிய தாகும். மானுடம் இனிவருங் காலங்களில் ஒழுக்க நெறியோடு திகழ வேண்டுமாயின் வள்ளுவம் இல்லந்தோறும் செயல்படுத்தப் பட வேண்டும். நாளைய சமுதாயம் ஆண் பெண் ஒழுக்கம் நிரம்பிய வள்ளுவரின் அறவழிச் சமுதாயமாக மலர வேண்டும்.

## துணைநூற்பட்டியல்

1. திருநாவுக்கரசு, க.த., திருக்குறள் நீதி இலக்கியம்,ப.24, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு;-2, 1971.
2. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல் ப.382, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை. 2003
3. மேலது, ப.386
4. பெருஞ்சித்திரனார் பாவலரேறு, திருக்குறள் மெய்ப்பொருளுரை, தென் மொழி பதிப்பகம், சென்னை, 2006
5. சாமி.சிதம்பரனார், வள்ளுவர் வாழ்வித்த தமிழகம், ப.84, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2001